தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### "கத்திரிக்காய் விலை உயர வாய்ப்பு'

**திண்டுக்கல்,**

கத்திரிக்காய் விலை உயர வாய்ப்புள்ளதால் விவசாயிகள் அதற்கு ஏற்றவாறு விற்பனை செய்து பயன் பெறலாம் என வேளாண்மைத் துறை துணை இயக்குநர் (வணிகம்) நா. செல்வராசு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் அளித்துள்ள தகவல்:

கடந்த 11 ஆண்டுகளில் கோவை, ஒட்டன்சத்திரம், தலைவாசல் ஆகிய இடங்களில் உள்ள மொத்த சந்தைகளில் நிலவிய வெண்டை மற்றும் கத்திரி விலையினை ஆராய்ந்து இந்த பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. தற்போது கிலோ ரூ.25க்கு விற்பனையாகும் வெண்டை மார்ச் கடைசி வாரம் முதல் விலை குறைய வாய்ப்புள்ளது. இந்தியாவிலிருந்து 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கத்திரிக்காய் ஏற்றுமதி செய்யப்படுகிறது. தற்போது வரிக் கத்திரிக்காய் கிலோவுக்கு ரூ.6 என்ற பண்ணை விலையில் விற்பனை ஆகிறது. 11 ஆண்டு ஆய்வுகளின் படி அடுத்த ஒரு மாதத்துக்கு கத்திரிக்காய் விலை கிலோவுக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை விலை உயர்வதற்கு வாய்ப்புள்ளது என தெரிவித்துள்ளார்.

### கறிக்கோழி பண்ணை கொள்முதல் விலையில் மாற்றமில்லை

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக்கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

வெள்ளிக்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 64 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் சனிக்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

**பெருந்துறை வேளாண்மைகூட்டுறவுச் சங்கத்தில் ரூ. 38 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்**

**பெருந்துறை,**

பெருந்துறை வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் நடைபெற்ற ஏலத்தில் ரூ. 38 லட்சத்துக்கு கொப்பரை விற்பனையானது.

இங்கு வாரம்தோறும் புதன், சனிக்கிழமைகளில் கொப்பரை ஏலம் நடைபெறுகிறது. சனிக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதி விவசாயிகள், 933 மூட்டைகளில், 46 ஆயிரம் கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதில், முதல் தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 85-க்கும், அதிகபட்சமாக ரூ. 87-க்கும் ஏலம் போனது.

இரண்டாம் தரக் கொப்பரை குறைந்தபட்ச விலையாக கிலோ ரூ. 58.30-க்கும், அதிகபட்சமாக ரூ. 80.75-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ. 38 லட்சத்துக்கு விற்பனை நடைபெற்றது.

**முட்டை விலையைக் குறைத்து விற்பதால் பண்ணையாளர்களுக்கே பாதிப்பு**

**நாமக்கல்,**

தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு (என்இசிசி) நிர்ணயிக்கும் விலையைவிடக் குறைத்து முட்டை விற்பனை செய்வதால் பண்ணையாளர்களுக்கே பாதிப்பு ஏற்படும் என்று, நாமக்கல்லில் நடைபெற்ற மண்டல என்இசிசி ஆலோசனைக் கூட்டத்தில் விளக்கப்பட்டது.

என்இசிசி சார்பில் நாமக்கல் மண்டலத்தில் ஜனவரி 1 முதல் இடைத்தரகு கழிவுத்தொகையின்றி முட்டை விலை நிர்ணயிக்கப்பட்டு, பண்ணைகளிலிருந்து முட்டைகள் விற்கப்படுகின்றன. தவிர, கடைகளுக்கு வியாபாரிகள் அளிக்க

வேண்டிய விலையும் ஊருக்கு தகுந்தபடி நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்தப் புதிய நடைமுறையால் 20 சதம் வரை முட்டை விற்பனை அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், ஒரு சில வியாபாரிகள் பண்ணையாளர்களிடம் புல்லட், மீடியம் முட்டைகள் என்பதை எடை அடிப்படையில் வாங்காமல் வார அடிப்படையில் அதாவது, 27 வாரம் வரையுள்ள கோழிகளிலிருந்து வரும் முட்டைகளுக்கு என்இசிசி கழிவு 20 காசுகள் என்றும், 28ஆவது வாரம் முதல் 40ஆவது வாரம் வரை உள்ள கோழிகளிலிருந்து வரும் முட்டைகளுக்கு என்இசிசி கழிவு 5 காசுகள் என்றும் குறைத்து வாங்குவதாகத் தெரிகிறது. விலை குறைத்து வாங்கும் முட்டைகளை அவர்கள் சந்தையில் 5 காசுகள் குறைத்து விற்று சந்தை நிலவரத்தைக் குழப்புவதாகவும் குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

என்இசிசி நிர்ணயிக்கும் விலையைவிட முட்டை விலையைக் குறைத்து அளிப்பதைத் தடுக்க பண்ணையாளர்கள், வியாபாரிகளுடனான கூட்டு ஆலோசனைக் கூட்டம் நாமக்கல்லில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

நாமக்கல் மண்டல என்இசிசி சார்பில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பண்ணையாளர்கள் சிலர் பேசியது: என்இசிசி நிர்ணயித்துள்ள விலையைவிட முட்டை விலையைக் குறைத்து விற்பதால் பண்ணையாளர்களுக்கே நஷ்டம் ஏற்படுகிறது. எனவே, பண்ணையாளர்கள் நேரடியாக விற்றாலும், வியாபாரிகளுக்கு விற்றாலும் என்இசிசி விலையைக் கட்டாயம் பின்பற்ற வேண்டும் என்றனர்.

தொடர்ந்து, என்இசிசி மண்டலத் தலைவர் பொ.செல்வராஜ் பேசியது: ஜனவரி 1 முதல் என்இசிசி விலை அடிப்படையில் முட்டைகள் விற்பனை செய்யப்படுவதால் பண்ணையாளர்களுக்கும், வியாபாரிகளுக்கும், நுகர்வோர்களுக்கும் நல்ல பலன் கிடைத்து வருகிறது. இதன் காரணமாக, சந்தை நிலவரத்தை அனுசரித்து கடந்த 6 நாளில் 55 காசுகள் வரை விலைக் குறைப்பு செய்ய முடிந்தது.

தற்போது 60 வாரத்துக்கு மேலான கோழிகளின் முட்டைகள் உடைவுத் தன்மை அதிகம் இருப்பதாகக் கூறி, பண்ணையாளர்கள் கூடுதலாக கழிவுத்தொகை ஒதுக்கி விற்பது தெரிய வருகிறது. 50 முதல் 60 வாரங்களுக்கு மேல் தீவனத்தில் கூடுதல் கவனம் செலுத்தினால் முட்டைகளை 60 கிராமுக்கு மேல் செல்லாமல் தடுக்க

முடியும். இதனால், முட்டை உடைவுத் தன்மை இருக்காது. இத்தகைய மாற்று நடவடிக்கைகளைக் கடைப்பிடித்து என்இசிசி விலையைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும்.

பண்ணையாளர்கள் ஒற்றுமையுடன் இருந்தால் விலைக் குறைப்பு பிரச்னை இருக்காது. விலைக் குறைப்பு பிரச்னை குறித்த புகார்களை தெரிவிக்க 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது. பண்ணையாளர்களின் பிரச்னைகளுக்கு இந்தக் குழு தீர்வு காணும் என்றார் அவர்.

**விவசாயிகள் கூட்டத்தில் கோரைக்கு விலை நிர்ணயம்**

**கரூர்,**

நெரூரில் சனிக்கிழமை நடைபெற்ற கோரை விவசாயிகள் கூட்டத்தில் கோரைக்கு அடிப்படை விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

பாய் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் கோரைப்புல் கரூர், ஈரோடு, நாமக்கல் பகுதியில் அதிகளவில் பயிரிடப்படுகிறது. உர விலையேற்றம், தண்ணீர் பற்றாக்குறை ஆகியகாரணங்களால் கோரை விவசாயிகள் அவதிப்பட்டு வந்தனர்.

இந்நிலையில் கோரையை விலைக்கு வாங்கும் பாய் உற்பத்தியாளர்கள் கோரை புல்லை மிகக்குறைந்த விலைக்கு ரூ. 850 முதல் 950 வரை ரகத்துக்கு ஏற்றவாறு வாங்குவது என கடந்த 1.3.2014 முதல் முடிவு செய்து கோரைப்புல்லை வாங்காமல் புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதனால் அதிருப்தியடைந்த கோரைப்புல் விவசாயிகள் கோரைக்கு விலை நிர்ணயம் செய்ய, கோரை விவசாயிகளை ஒன்றிணைக்க புதிய சங்கம் உருவாக்குவது என கடந்த 4-ம் தேதி (செவ்வாய்க்கிழமை) நெரூரில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் முடிவு செய்தனர்.

இதையடுத்து கோரை புல் விவசாயிகளின் அவசரக்கூட்டம் சனிக்கிழமை மீண்டும் நெரூரில் நடைபெற்றது. இதில் கரூர் மாவட்ட கோரைப்புல் விவசாயிகள் சங்கம் தோற்றுவிக்கப்பட்டு சங்கப் பெயர் பலகை திறக்கப்பட்டது. தொடர்ந்து சங்க நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் தலைவராக என். சின்னதுரை,

செயலராக சுந்தரம், பொருளாளராக கே.கே. சண்முகம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

பின்னர் கூட்டத்தில் 54 இன்ச் ஸ்பெஷல் கோரை 6 முடிக்கு ரூ. 1,500, சாதா வளத்தி 6 முடி கோரைக்கு ரூ. 1,300, மார்மட்டம் 8 முடி கோரைக்கு ரூ. 900 என விலை நிர்ணயிக்கப்பட்டது. இந்த விலைக்கு குறைவாக பாய் உற்பத்தியாளர்களுக்கு விற்பதில்லை எனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதில் ஏராளமான கோரை விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## அறுவடை தொடக்கம்: பேச்சிப்பாறை,பெருஞ்சாணி அணைகள் மூடல்

**நாகர்கோவில்,**

கன்னியாகுமரி மாவட்டத்தில் நெல் அறுவடை தொடங்கிவிட்ட நிலையில், பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் சனிக்கிழமை இரவு மூடப்பட்டன.

இம்மாவட்டத்தில் நெல் சாகுபடிக்காக பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகள் கடந்த ஜூன் மாதம் திறக்கப்பட்டது. தற்போது நெற் பயிர்கள் அறுவடைக்குத் தயாராகி வருகின்றன.

கடந்த இரு தினங்களுக்கு முன் அணைகளை மூட பொதுப்பணித் துறை பொறியாளர்கள் முடிவுசெய்தனர். ஆனால் தோவாளை கால்வாயில் கோழிக்கோட்டு பொத்தை பகுதியின்கீழ் மேலும் ஒரு வாரத்துக்கு தண்ணீர் தேவை என அப்பகுதி விவசாயிகள் கேட்டுக் கொண்டதையடுத்து, அப்பகுதிகளுக்கு கூடுதலாக கால்வாயில் தண்ணீர் திறந்து விடப்பட்டது.

தற்போது அப்பகுதிகளுக்கு தண்ணீர் தேவையில்லை என்பதால் அணைகளில் இருந்து தண்ணீர் திறந்துவிடுவதை நிறுத்த அதிகாரிகள் முடிவுசெய்தனர்.

இதையடுத்து சனிக்கிழமை இரவு பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகள் மூடப்பட்டன.

தற்போது பேச்சிப்பாறை அணையில் 6.85அடி தண்ணீரும், பெருஞ்சாணி அணையில் 36.92 அடி தண்ணீரும் உள்ளன. ஜூனில் நெல் சாகுபடிக்கு அணைகள் திறக்கப்படும் என பொதுப்பணித் துறை பொறியாளர்கள் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## தீவன தட்டுப்பாட்டை ஈடுகட்டும் "அசோலா' விவசாயிகளுக்கு கால்நடைத்துறை அழைப்பு

**ஈரோடு:** ஈரோடு மாவட்டத்தில், வறட்சியால் ஏற்படும், கால்நடை தீவன பிரச்னைக்கு, அசோலா தீவனத்தை பயன்படுத்த, கால்நடைத்துறை அழைப்பு விடுத்துள்ளது.

இந்தியாவில் கடந்த, பத்து முதல், 15 ஆண்டாக, அதிக விளைச்சல் தரும் புதிய தீவனபுல் (கோ-4, சுபாபுல், தீவன சோளம், பயிறுவகை தீவன புற்கள்) ரகங்களின் வருகையால், வைக்கோல், தானியங்களின் விகிதம் வெகுவாக குறைந்தது. விவசாயிகள் விளைச்சலை மட்டும் கருத்தில் கொண்டு பயிரிடுவதால், கால்நடைகளுக்கு தீவன தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மழையால், தீவன பற்றாக்குறை ஏற்படுவதுடன், கால்நடைகளுக்கு தேவையான சத்துள்ள தீவனங்கள் கிடைப்பதில்லை. இதனால், அதிக சத்துள்ள தீவனம் வழங்க, கால்நடை பராமரிப்பு துறை, கால்நடை பெருக்கம் மற்றும் தீவன அபிவிருத்தி துறை கவனம் செலுத்தியுள்ளது.

அம்முயற்சியால், "அசோலா' என்ற சிறிய வகை தாவரம், கால்நடைகளுக்கான தீவன தேவையை சமாளிக்க முடியும், என நிரூபித்துள்ளனர். இவ்வகை, தாவரங்களை வளர்க்க, சிறிய அளவில் இடவசதி இருந்தாலே போதும். "அசோலா' தண்ணீரில் மிதந்து வளரும், "பெரணி' வகை தாவரம். நம் தட்ப, வெப்ப நிலைக்கு ஏற்ப, வளர்வதில், "அசோலா மைக்ரோப்பில்லா' என்ற வகை, முதலிடம் வகிக்கிறது.

"அசோலா' பொதுவாக முக்கோணம் அல்லது வட்ட வடிவில் இருக்கும். இதன் அளவு, 3 -4 செ.மீ., ஆகும். இலைகள் மிக சிறியவை. ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி இருக்கும். வேர்கள் இலைகளின் அடிப்புறத்தில் காணப்படும். இலையில் மேற்பரப்பில், "ஹெட்டிரோசைட்' எனப்படும் வெற்றிடத்தில், "அன்பீனா அசோலா' என்ற நீலப்பச்சை பாசி காணப்படும்.

இது வளிமண்டல நைட்ரஜனை எடுத்து, அசோலாவில் சேமிக்கிறது. அசோலாவும், நீல பச்சைப்பாசியும், கூட்டு வாழ்க்கை நடத்துகின்றன. இந்த இணை வாழ்க்கை மூலம் அசோலா ஒரு மாவுச்சத்து (கார்போ ஹைட்ரேட்) மற்றும் புறச்சத்து (புரோட்டின்) நிறைந்த தீவனமாக திகழ்கிறது.

மிகவும் வேகமாக வளரும் தன்மை கொண்டது. இதை பாத்திமுறை மற்றும் நெல் வயல்களிலும் வளர்க்கலாம். அசோலா, 7 நாளில் பாத்தி முழுவதும் பாய் விரித்தது போன்று பரவிவிடும். அசோலாவின் ஒரு நாள் உற்பத்தி, 300 கிராம். அசோலாவின் ஆண்டு உற்பத்தி, 1,000 டன்.

கால்நடைகளுக்கு, உணவாக கண்டுபிடிக்கப்பட்ட அசோலாவை கோழிகளுக்கும் உணவாக வைக்கலாம், என கால்நடைத்துறை தெரிவித்துள்ளது.

கால்நடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் ஜெயராமன் கூறுகையில், ""சத்துகள் நிறைந்த அசோலாவை தீவனமாக, கால்நடைகளுக்கு பயன்படுத்துவது போலவே, கோழிகளுக்கும் உணவாக பயன்படுத்தலாம். கால்நடை துறையால் கண்டறியப்பட்ட அசோலாவில், எண்ணற்ற சத்து உள்ளது. இதை கோழிக்கு வைப்பதன் மூலம், கோழி எடை அதிகரிப்பதுடன், முட்டையின் உற்பத்தியும் அதிகரிக்கும்," என்றார்.

## தக்காளி விலை இரு மடங்காக உயர்வு

**ஈரோடு**: ஈரோடு மார்க்கெட்வுக்கு தக்காளி வரத்து குறைய துவங்கி உள்ளதால், ஒரே வாரத்தில், கிலோ, ஐந்து ரூபாயில் இருந்து, பத்து ரூபாயாக அதிகரித்துள்ளது. ஈரோடு மார்க்கெட்டுக்கு கர்நாடகா, ஆந்திரா மற்றும் தாளவாடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இருந்து, பெங்களூரு தக்காளி, 618 எனப்படும் நாட்டுத்தக்காளி ரகங்கள் விற்பனைக்கு வருகின்றன. பெங்களூரு தக்காளியை விட, நாட்டுத்தக்காளி ருசி அதிகம் என்பதால், அதன் விற்பனை அதிகமிருக்கும்.கடந்த, அக்டோபர் மாதம் கர்நாடகாவில் பெய்த கனமழையால், விளைச்சல் பாதிக்கப்பட்டு கிலோ, 20 முதல், 25 ரூபாய் வரை அதிகரித்தது. தொடர்ந்து வரத்து அதிகரித்ததால், நவம்பர், டிசம்பர் மாதங்களில் விலை சரிந்து, 15 கிலோ பெட்டி, 400ல் இருந்து, 200 ரூபாயாக குறைந்தது.கடந்த, இரண்டு மாதங்களாக விளைச்சல் அதிகரித்து, 15 கிலோ பெட்டி, 30 முதல், 40 ரூபாய்க்கு விற்கப்பட்டது. இந்நிலையில், கடந்த வாரம், கிலோ, ஐந்து ரூபாய்க்கு விற்கப்பட்ட

தக்காளி, இந்த வாரம், பத்து ரூபாயாக அதிகரித்துள்ளது. வறட்சியால் விளைச்சல் சரிந்துள்ளதால், பெட்டி, 40 ரூபாய்க்கு விற்கப்பட்ட தக்காளி, தற்போது, இருமடங்காக, 80 ரூபாயாக, அதிகரித்துள்ளதாக, வியாபாரிகள் கூறினர்.

**பெண்ணையாறு - பாலாறு இணைப்பு திட்ட மதிப்பீடு எகிறியது**

பெண்ணையாறு (சாத்தனூர் அணை) - பாலாறு இணைப்பு திட்டத்தை, மாநில அரசே செயல்படுத்த முடிவு செய்துள்ளது. ஆனால், நிலம் கையகப்படுத்தும் சட்டத்தில், புதிய திருத்தம் கொண்டு வரப்பட்டுள்ளது. விலைவாசி உயர்வால், திட்ட செலவு அதிகரித்திருப்பதால், மத்திய அரசின் கடனுதவி பெற, தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

பெண்ணையாறு - பாலாறு இணைப்பு திட்டத்தின்படி, பெண்ணையாற்றின் உபரி நீரை, பாலாற்று கிளை ஆறான, செய்யாற்றிற்கு கொண்டு செல்ல வேண்டும். சாத்தனூர் அணையின், தலை மதகில் இருந்து, 23.55 கி.மீ., துாரத்திற்கு, இணைப்பு கால்வாய் வெட்டி, செய்யாற்றில் உள்ள, ஆலத்துார் அணையின் மேற்புறம் இணைக்க வேண்டும். மேலும், இணைப்பு கால்வாயில் இருந்து, 38.72 கி.மீ., துாரத்திற்கு, வரத்து கால்வாய் அமைத்து, துரிஞ்சலாற்றுடன் இணைத்து, நந்தன் வாய்க்காலுக்கு, தண்ணீர் வழங்க வேண்டும்.

இத்திட்டம் நிறைவேறினால், பெண்ணையாற்றின், 5.69 டி.எம்.சி., உபரி நீர், பாலாறு வடி நிலத்திற்கு திருப்பப்படும். "இதனால், திருவண்ணாமலை மாவட்டத்தில், திருவண்ணாமலை, செங்கம், தண்டராம்பட்டு, போளூர், வந்தவாசி வட்டங்கள் மற்றும் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்திற்குட்பட்ட, 46 ஆயிரம் ஏக்கர், பாசன வசதி பெறும்' என, பொதுப்பணித் துறை மதிப்பிட்டு உள்ளது. "திட்டத்தை நிறைவேற்ற, 250 கோடி ரூபாய் செலவாகும்' என, மதிப்பீடு செய்யப்பட்டது. இதன் அடிப்படையில், நிதி கேட்டு போராடி வந்த தமிழக அரசு, "நிதி வழங்க, மத்திய அரசு தாமதப்படுத்தி வருவதால், தமிழக அரசே, திட்டத்தை செயல்படுத்தும்' என, கடந்த ஆண்டு அறிவித்தது. இந்நிலையில், பொதுப்பணித்துறையின் திட்டம் மற்றும் ஆராய்ச்சி பிரிவு, கடந்த, ஓராண்டாக, திட்டத்துக்கான சாத்திய கூறுகள், எந்தெந்த பகுதிகளில், நிலத்தை கையகப்படுத்த வேண்டும் என்பது குறித்து, ஆய்வு நடத்தி வருகிறது. இந்த ஆய்வு, தற்போது முடியும் நிலையில் உள்ளது. ஆய்வு பணிகள் நடந்து கொண்டிருந்த போது, நிலம்

கையகப்படுத்துவதில், சட்ட திருத்தத்தை மத்திய அரசு கொண்டு வந்தது; இதனால், நில இழப்பீடு, அதிகளவில் உயரும். அதே போல், கடந்த, ஓராண்டாக, விலைவாசி உயர்ந்துள்ளதால், திட்டத்தின் மதிப்பீடு, பன்மடங்கு உயரும் என, எதிர்பார்க்கப்படுகிறது. எனவே, பெண்ணையாறு - பாலாறு இணைப்பு திட்டத்தை செயல்படுத்த, மத்திய அரசிடம் நிதி கேட்பது என, தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

**சிக்கல் : குறுகிய கால பயிர்களில் விவசாயிகள் ஆர்வம் : குறைகிறது விளைநிலங்களில் நிலத்தடி நீர்**

**சிறுபாக்கம்**: நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால், நீண்டகால பயிர்களை விடுத்து பூக்கள், காய்கறிகள், வெள்ளரி போன்ற குறுகிய கால பயிர்களைப் பயிரிட விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.மங்களூர், நல்லூர் ஒன்றியத்தில் 70க்கும் மேற்பட்ட கிராமங்களில் உள்ள விவசாய நிலங்களில் மூன்றில் இரு பகுதி மானாவாரி நிலங்கள். ஒரு பகுதி நீர்ப்பாசன நிலமாக இருந்தது. அவற்றில், நீண்டகால பயிர்களான கரும்பு, மரவள்ளி, நெல், மஞ்சள், மணிலா போன்றவற்றை பயிரிட்டு வந்தனர்.கடந்த நான்கு ஆண்டுளுக்கு முன்பு வரை, பருவநிலை மாற்றம் காரணமாக பருவமழை படிப்படியாக குறைந்தது. இதனால் கரும்பு, மரவள்ளி, மஞ்சள், மணிலா, நெல் போன்றவற்றை பயிரிட முடியாமல் விவசாயிகள் கடும் சிரமம் அடைந்தனர்.மேலும், ஐந்து ஏக்கரில் பயிரிட்டு வந்த இப்பயிர்கள், ஒரு ஏக்கரில் மட்டுமே பயிரிட முடிந்தது. கிடுகிடுவென நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, கிணற்று நீர்ப்பாசனத்திற்கும் தட்டுப்பாடு ஏற்பட்டது.இதனால், குறைவான நீரைக் கொண்டு பூக்கள், காய்கறிகள், வெங்காயம் போன்றவற்றை விவசாயிகள் பயிரிடத் துவங்கினர். தற்போது, விதைநேர்த்தி செய்த நவீன ரக வெள்ளரி பயிரையும் கூடுதலாக பயிரிட்டு வருகின்றனர்.சிறுபாக்கம் அடுத்த ஈரியூர், மாங்குளம், கீழ்ஒரத்தூர், கொளவாய் உட்பட 25க்கும் மேற்பட்ட கிராமங்களில் நீண்ட கால பயிர்களை விடுத்து பூக்கள், காய்கறிகள், வெங்காயம், வெள்ளரி போன்ற குறுகிய கால பயிர்களை விவசாயிகள் அதிகளவு பயிரிட்டுள்ளனர்.அவற்றில், காய்கறிகள், பூக்களை சேலம் மாவட்டம் தலைவாசல், ஆத்தூர் மாவட்டம் கள்ளக்குறிச்சி பகுதியிலும், பூக்களை விருத்தாசலம் பகுதியிலும் மொத்தமாக விற்பனை செய்து வருவாய் ஈட்டி

வருகின்றனர்.நிலத்தடி நீர்மட்டம் குறைந்ததால் நீண்டகால பயிர்களான கரும்பு, நெல், மணிலா, மஞ்சள் போன்றவற்றை தவிர்த்து குறுகிய காலம் மற்றும் போதிய வருவாய் தரக்கூடிய பூக்கள், காய்கறிகள், வெள்ளரி, வெங்காயம் பயிரிடுவதில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## மரவள்ளி விளைச்சல் பாதிப்பு

**மரக்காணம்**: பருவ மழை பொய்த்ததால் மரக்காணம் பகுதியில் மரவள்ளி விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது.மரக்காணம் ஒன்றியம் கந்தாடு, நடுக்குப்பம், வண்டிப்பாளையம், கோட்டிக்குப்பம், திருக்கனூர், கே.எண். பாளையம், புதுப்பாக்கம் உள்பட 24 கிராமங்கள் உள்ளன. இங்கு மா, பலா, தென்னை ஆகியவற்றிற்கு அடுத்தபடியாக விவசாயிகள் மரவள்ளி பயிர் செய்கின்றனர். இப்பகுதியில் பருவமழை பொய்த்து போனதால் இந்த ஆண்டு 6 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மரவள்ளி சாகுபடி செய்தனர் .ஆண்டு பயிராக மரவள்ளி உள்ளதால் மாதம் ஒரு மழை இருந்தால் போதும் என்ற நிலை இருந்தது. ஆனால் வழக்கத்திற்கும் மாறாக இந்த ஆண்டு முற்றிலும் மழை பெய்யவில்லை . இதனால் மார்ச் மாதம் மரவள்ளி அறுவடை துவங்கியது. ஏக்கர் ஒன்றுக்கு வழக்கத்தை விட குறைவான மகசூல் கிடைத்திருப்பதாக விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். கந்தாடு, நடுக்குப்பம் பகுதியில் இருந்து அறுவடை செய்யப்பட்ட மரவள்ளி கிழங்குகள் அனைத்தும் சேலம், பெங்களூரு போன்ற நகரங்களுக்கு விற்பனைக்கு செல்கின்றன.

## தர்பூசணி விற்பனை ஜோர்

**சங்கராபுரம்**:சங்கராபுரம் பகுதியில் தர்பூசணி விற்பனை சூடுபிடித்துள்ளது.
கோடை வெயிலின் தாக்கத்தை தணிக்க தர்பூசணி பெரிதும் துணை நிற்கிறது. சங்கராபுரம் கடை வீதியில் தர்பூசணி விற்பனை தொடங்கி உள்ளது. திருவண்ணாமலையை சேர்ந்த வியாபாரி ஒருவர் லாரியில் தர்பூசணியை கொண்டு வந்து விற்பனை செய்கிறார். ஒரு பழம் 15 ருபாய் முதல் சைஸ்சுக்கு தகுந்தாற்போல் 30 ருபாய் வரை விற்கப்படுகிறது. இதனால் அனைவரும் தர்பூசணியை விரும்பி சாப்பிடுகின்றனர்.

## முருங்கை காய் வரத்து அதிகரிப்பால் விலை சரிவு

**வெள்ளகோவில்**: வெள்ளகோவிலில், நேற்று வாரச்சந்தை நடந்தது. இங்கு காலை முதல், முருங்கை விவசாயிகள், டூவீலர் மற்றும் பஸ்களில் எடுத்து வந்து விற்பனை செய்தனர்.

காலை முதல், முருங்கை ஒரு கிலோ, மூன்று ரூபாய்க்கு விற்பனையானது. 25 காய் கொண்ட ஒரு கட்டு, ஐந்து முதல், 15 ரூபாய் வரை விற்றது. இதனால், விவசாயிகள், மரத்தில் இருந்து பறித்து, கட்டி, டூவீலரில் ஏற்றி வந்து, சுங்க கட்டணம் கொடுத்து, விற்க வேண்டி உள்ளது. காலை ஏழு முதல், 12 மணி வரை, முருங்கை லோடு வந்த வண்ணம் இருந்தது.

வெள்ளகோவில், முத்தூர், மூலனூர் பகுதிகளில் விளையும் முருங்கைக்காய்களை, பதப்படுத்த ஒரு குடோன் மற்றும் அதிக விளைச்சல் பெரும்போது, அதை உரிய வகையில் பயன்படுத்தி, அதை பவுடராக மாற்றி, முருங்கை விளைச்சல் குறையும்போது, ஏற்றுமதி செய்யும் வகையில், பவுடர் பேக்டரியை, தமிழக அரசு ஏற்படுத்த வேண்டும், என, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## மஞ்சள் மார்க்கெட் நாள் விடுமுறை

**ஈரோடு**: மாரியம்மன் கோவில் விழாவை முன்னிட்டு, மஞ்சள் மார்க்கெட்டுக்கு, ஏழு நாட்கள் விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.

ஈரோடு பெரிய மாரியம்மன், காரை வாய்க்கால் மாரியம்மன், நடு மாரியம்மன் கோவில் குண்டம் மற்றும் தேர் திருவிழா அடுத்த மாதம் முதல் வாரத்தில் நடக்கிறது. மஞ்சள் வணிகத்தை சார்ந்துள்ள அனைவரும், பண்டிகையை கொண்டாடும் பொருட்டு, ஆண்டுதோறும் பண்டிகை காலத்தில் மஞ்சள் மார்க்கெட்டுக்கு விடுமுறை அளிப்பது வழக்கம்.

அதுபோல், இந்தாண்டும் வரும், 31ம் தேதி முதல், நான்காம் தேதி வரை, ஐந்து நாட்கள், மஞ்சள் மார்க்கெட்டுக்கு விடுமுறை அளிக்கப்படுகிறது. சனி, ஞாயிறு கிழமைகள் வழக்கமான விடுமுறை நாட்களாகும். ஏழாம் தேதியே மஞ்சள் மார்க்கெட் திறக்கப்பட்டு வழக்கம் போல் செயல்படும், என, ஈரோடு மஞ்சள் வணிகர்கள் மற்றும் கிடங்கு உரிமையாளர்கள் சங்க செயலாளர் துரைசாமி தெரிவித்து உள்ளார். ஹோலி, பண்ணாரி மாரியம்மன் கோவில் குண்டம் விழாவுக்காக, 17, 18 ஆகிய இரு நாட்களும் சேர்த்து, 15ம் தேதி முதல், நான்கு

நாட்களுக்கு மஞ்சள் மார்க்கெட்டுக்கு விடுமுறை அளிக்கப்பட்டு உள்ளது, என்பது குறிப்பிடத்தக்கது. அவ்வப்போது தொடர் விடுமுறை இருப்பதால், மார்க்கெட் கூடும் நாட்களில், மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைக்கும், என்று விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

**பச்சை தீவனத்துக்கு கடும் கிராக்கி சோளத்தட்டு கட்டு ரூ.10க்கு விற்பனை**

**ஈரோடு**: வறட்சியால் ஆடு, மாடு, குதிரைகள் உண்ணும் பச்சை சோளத்தாட்டு, கட்டு, 10 ரூபாய்க்கு ஈரோட்டில் விற்பனையாகிறது.

தமிழகத்தில் பருவமழை பொய்த்ததாலும், காவிரியில் தண்ணீர் திறக்க கர்நாடகா மறுப்பதால், தமிழகத்தில் பெரும்பாலான மாவட்டத்தில் விவசாயிகள், பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.

ஈரோடு மாவட்டத்தில் வறட்சி கோர தாண்டவமாடுகிறது. நிலத்தடி நீர்மட்டமும் வேகமாக குறைந்து வருவதால், முன் கூட்டியே சாகுபடி செய்திருந்த நிலங்களுக்கு, தண்ணீர் பாய்ச்ச முடியாத பரிதாப நிலைக்கு, ஈரோடு மாவட்ட விவசாயிகள் தள்ளப்பட்டனர்.

குறிப்பாக, கால்நடைகளுக்கு பச்சை தீவனம் பெரும் பிரச்னையாக உள்ளது. ஈரோடு டவுன் பகுதியில், ஏராளமான ஜவுளிச்சந்தை மற்றும் வணிக பயன்பாட்டுக்கு மாட்டு வண்டிகள் அதிகமாக பயன்படுத்தப்படுகிறது. இந்த வண்டிகளுக்கான மாடுகளுக்கு, பச்சைத்தீவனம் மற்றும் பிற தீவனங்கள் கிடைக்காமல் திணறுகின்றனர்.

பச்சை சோளத்தட்டு வியாபாரி சென்னியப்பன் கூறியதாவது:

கடந்த, 37 ஆண்டுகளாக பச்சை தீவனம் வாங்கி விற்பனை செய்கிறேன். கடந்தாண்டில், ஒரு ஏக்கர் சோளத்தட்டு, 15 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனையானது.வறட்சி அதிகரிப்பால், அதன் விலை தாறுமாறாக உயர்ந்து, 25 ஆயிரம் ரூபாய் வரை விலை போகிறது. ஏக்கருக்கு, 2,000 கட்டுகள் கிடைக்கும். கடந்தாண்டில் கட்டு ஒன்று, ஐந்து முதல், ஏழு ரூபாய் வரை விலை போனது.நடப்பாண்டில் விவசாய பூமியிலேயே, எட்டு ரூபாய் கொடுத்து, ஒரு கட்டு வாங்கி வருகிறோம். ஆட்டோக்கு, 400 கட்டுகள் மட்டுமே ஏற்ற முடியும். தற்போது பச்சை சோளத்தட்டு கட்டு ஒன்றுக்கு, பத்து ரூபாய் வரை விலைபோகிறது.

இதனை, ஈரோடு டவுன் பகுதியில் உள்ள ஆடு, மாடு, குதிரைகள் வளர்ப்போர், அதிகளவில் தீவனமாக வாங்கி செல்கின்றனர்.

நெல் சாகுபடி குறைந்ததுடன், கிணற்று பாசனத்தில் அறுவடை நடக்கும் இடங்களிலும், இயந்திரம் கொண்டு துண்டிக்கப்படுவதால், வைக்கோலை கால்நடை தீவனமாக பயன்படுத்த முடிவதில்லை. நெல் அறுவடை நடக்கும் வயல்களுக்கு சென்று, மொத்தமாக பேசி, ஆட்களை வைத்து அறுவடை செய்து, வைக்கோலை சில வியாபாரிகள் கூடுதல் விலை கொடுத்து வாங்கி வருகின்றனர். இதுவும் சொந்த பயன்பாட்டுக்கு மட்டுமே, மொத்தமாக சிலர் வாங்கிச் செல்வதால், பச்சை சோளத்தட்டு தவிர பிற தீவனத்துக்கு வழியின்றிப்போகிறது, என்றார்.

## தடுப்பு ஊசி முகாம்

**உடையார்பாளையம்**: உடையார்பாளையம் அருகே உள்ள கழுவன்தோண்டி பஞ்சாயத்தில், கோமாரி நோய் தடுப்பு ஊசி போடும் முகாம் நடந்தது.முகாமிற்கு, பஞ்சாயத்து தலைவர் ராஜ்குமாரி மகாலிங்கம் தலைமை வகித்தார். மண்டல இணை இயக்குனர் செல்லப்பெருமாள், முகாமை துவக்கி வைத்தார். முகாமில் பங்கேற்ற, 452 கால்நடைகளுக்கு கால்நடை மருத்துவர் அன்பரசன் தலைமையில், உதவியாளர் கஸ்தூரி உள்ளிட்டோர் அடங்கிய மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர்.முகாமில், முன்னாள் தலைவர் மகாலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முகாமில், கால்நடை விவசாயிகள், கால்நடைகளுடன் திரளாக கலந்து கொண்டனர். தொடர்ந்து, கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு ஊசி போடப்பட்டது.

பஞ்சாயத்து செயலாளர் அழகேசன் நன்றி கூறினார்.

## நெல்லைக்கு 1,000 டன் அரிசி அனுப்பி வைப்பு

**மன்னார்குடி**: ரேஷன் கடைகளில் வினியோகிப்பதற்காக, நீடாமங்கலம் ரயில்வே ஸ்டேஷனில் இருந்து, சரக்கு ரயில் மூலம் நெல்லைக்கு, 1,000 டன் அரிசியை, நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகள் அனுப்பி வைத்தனர். தஞ்சை, திருவாரூர் மாவட்டங்களில் அதிகளவில் நெல் உற்பத்தி செய்யப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தில், விளையும் நெல், நுகர்பொருள் வாணிபக்கழக கொள்முதல்

நிலையங்களில், விவசாயிகளிடம் இருந்து, அரசு நிர்ணயித்த விலையில் நேரடியாக பெறப்படுகிறது.திருவாரூர் சுற்றுவட்டாரத்தில் விளையும் நெல் மூட்டைகள் மன்னார்குடி, பாமணி, சுந்தரக்கோட்டை, ஆலங்குடி ஆகிய இடங்களிலுள்ள, ஆலை கிடங்குகளுக்கு அரவைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. பின், இங்கிருந்து தேவைக்கேற்ப சேமிப்பு கிடங்குக்கோ, வெளி மாவட்டங்களில், பொதுவினியோக திட்டத்தில் ரேஷனில் வழங்கவோ, சரக்கு ரயிலில் அனுப்பப்படுகிறது.அதன்படி, 1,000 டன் சன்ன ரக அரிசி மூட்டைகள், கிடங்குகளில் இருந்து, நீடாமங்கலம் ரயில்வே ஸ்டேஷனுக்கு கொண்டு கொண்டு வரப்பட்டது. தொடர்ந்து, அங்கிருந்து சரக்கு ரயில் மூலமாக, நெல் மூட்டைகளை, திருவாரூர் நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அழகிரிசாமி மேற்பார்வையில் நெல்லைக்கு அனுப்பி வைத்தனர்.மண்டல மேலாளர் அழகிரிசாமி கூறுகையில், ""பொதுவினியோக திட்டத்தில், ரேஷனில் பொதுமக்களுக்கு வினியோகிக்க, புதுகை மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு, 1,000 டன் அரிசி வீதம் அனுப்பி வைக்கப்பட்டது. தற்போது, நெல்லைக்கு, ஆயிரம் டன் சன்ன ரக அரிசி மூட்டைகள் அனுப்பப்பட்டுள்ளது," என்றார்.

## காய்கறிகளை பதப்படுத்த குடோன்; விவசாயிகள் எதிர்பார்ப்பு

**மேலுார்**: மேலுாரில் காய்கறிகள் வீணாவதை தவிர்க்க, குளிர்சாதன வசதியுடன் குடோன் அமைக்க வேண்டும் என விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். மேலுார் மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் நுாற்றுக்கணக்கான ஏக்கரில் கத்தரி, வெண்டை, தக்காளி, பூசணி பயிரிடப்படுகிறது. இரு ஆண்டுகளாக பருவமழை பொய்த்தது. நெல், கரும்பு விவசாயம் செய்வதை காட்டிலும், காய்கறி விவசாயத்திற்கு குறைந்த தண்ணீர் தேவைப்படுவதால் விவசாயிகள் காய்கறிகளை பயிரிடுகின்றனர். விளைச்சல் அதிகமாக, இருப்பதால், காய்கறிகள் விலை வீழ்ச்சியடைகிறது. கொட்டகுடி விவசாயி அய்யனார் கூறியதாவது: விளைந்த காய்கறிகளை விவசாயிகள் மார்கெட்டிற்கு ஒரே நேரத்தில் கொண்டு செல்கின்றனர். தேவையை விட உற்பத்தி அதிகமாவதால் போதிய விலை கிடைக்காமல், நஷ்டப்படுகின்றனர். காய்கறிகளை பதப்படுத்தி, வைத்து தேவைப்படும் நேரத்தில் விற்க ஏதுவாக, குடோன் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்றார்.

### மாம்பழத்தை பழுக்க வைக்க விவசாயத்துறை யோசனை

**மதுரை**: 'மாம்பழங்களை செயற்கை முறையில் பழுக்க வைக்க கூடாது,' என்கிறது, உணவு பாதுகாப்பு துறை. 'எதிபான்' என்ற, வேதிப்பொருள் மூலம், இயற்கை முறையில் பழுக்க வைக்கலாம், என விவசாயத் துறையினர் தெரிவித்தனர்.கடந்தாண்டு 'கார்பைடு' கற்கள் மூலம் மாங்காய்கள், பழமாக மாற்றப்பட்டன. இக்கற்களால், தோலின் மேற்புறத்தை மட்டும், மஞ்சள் நிறமாக்கமுடியும். உட்பகுதி காயாக இருப்பதால், சாப்பிடும்போது வயிற்று வலி ஏற்படும்.எனவே கார்பைடு முறையில், பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்களை, உணவு பாதுகாப்பு அலுவலர்கள், பறிமுதல் செய்து அழித்தனர். தற்போது, மாம்பழங்கள் வரத்து துவங்கி விட்டது.பழங்களை பழுக்க வைக்க, 'எதிபான்' வேதிமருந்தை பயன்படுத்தலாம் என, விவசாயத்துறையினர் பரிந்துரைத்துள்ளனர். அந்த மருந்தை, மாங்காய்களுக்கு நடுவில் ஒரு பாத்திரத்தில் வைத்தால், மறுநாள் பழுத்துவிடும். 'ஸ்பிரே' முறையில் தெளிக்கக்கூடாது என, தெரிவித்துள்ளனர். செயற்கை முறையில் பழுக்க வைக்க, உணவு பாதுகாப்பு சட்டம் தடை விதிக்கிறது. ஆனால் இந்த முறையில் பழுக்க வைத்த பழங்களை பறிமுதல் செய்வது, தவறு என விவசாயத் துறையினர் தெரிவிக்கின்றனர்.கலெக்டர் தலைமையில் விவசாயத்துறை, உணவு பாதுகாப்பு அலுவலர்கள் இணைத்து பேசி, தெளிவுபடுத்தினால் தான், இப்பிரச்னைக்கு தீர்வு காண முடியும்.

### பழநியில் மழையில்லாததால் அணைகளின் நீர்மட்டம் குறைவு

**பழநி**: பழநியில் உள்ள குதிரையாறு அணை, பாலாறு பொருந்தலாறு அணை, வரதமாநதி அணைகளுக்கு நீர்வரத்து இல்லாததால், நீர்மட்டம் வேகமாக குறைந்துவருகிறது. கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ளதாலும், போதிய மழையில்லாததாலும் பழநிபகுதி விவசாயம், குடிநீர் ஆதாரமாக உள்ள அணைகளின் நீர்மட்டம் குறைந்து வருகிறது. அணைகளில் இருந்து குடிநீருக்கு மட்டும்தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணைகளின் நேற்றைய நிலவரம்: பாலாறுபொருந்தலாறு அணையில் 7 கன அடி நீர் குடிநீருக்காக வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 33.17 அடி (மொத்தம்65 அடி). குதிரையாறு அணையின் நீர்மட்டம் 40.49 அடி (மொத்தம்80 அடி).வரதமாநதி அணையில் 2கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது. நீர்மட்டம் 46.95 அடி (மொத்தம்

67அடி). பரப்பலாறு அணையில் 3 கன அடி குடிநீர் தேவைக்காக வெளியேற்ற படுகிறது. நீர்மட்டம் 47.65 அடி (மொத்தம்90 அடி). நங்காஞ்சியாறு ஆறு அணையின் நீர்மட்டம் 15.48 அடி (மொத்தம் 40அடி), கொடகனாறு அணையின் நீர்மட்டம் 0.13அடி (மொத்தம் 27.4) அடி) உள்ளது.

## தேனி மாவட்ட தோட்டக்கலைத்துறை இலக்கு; 30 ஆயிரம் எக்டேரில் வாழை சாகுபடி

**தேனி**: தேனி மாவட்டத்தில், வாழை சாகுபடியை ஏழாயிரம் எக்டேரில் இருந்து, 30 ஆயிரம் எக்டேராக உயர்த்த, இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில், தற்போது ஏழாயிரம் எக்டேரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. வாழை ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரித்து வருவதால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கிறது. தற்போது வாழை கிலோ 20 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. விரைவில் 25 ரூபாய் வரை உயர வாய்ப்புள்ளது. தவிர, வெளிநாடுகளுக்கு அதிகளவு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு இன்னும் தேனி மாவட்டத்தில் விளைச்சல் போதவில்லை. வெளிநாடுகளில் உள்ள சூப்பர் மார்க்கெட்டுகளுக்கு, வாழை தொடர்ந்து ஏற்றுமதி செய்ய, குறைந்தபட்சம் 30 ஆயிரம் எக்டேராவது சாகுபடி செய்ய வேண்டும். பல வெளிநாடுகள் ஏற்றுமதி ஆர்டர் வழங்கி வருவதால், மாவட்டத்தில் வாழை உற்பத்தியை 7000 எக்டேரில் இருந்து, 30 ஆயிரம் எக்டேராக உயர்த்தும் முயற்சியில் தோட்டக்கலைத்துறை இறங்கி உள்ளது. காற்றினால், வாழை அதிகம் பாதிக்கப்படுவதை தடுக்க, போடி, சிலமலை, ராசிங்காபுரம் பகுதியில் சித்தகத்தி செடிகளை வளர்த்து, உயிர்வேலி அமைத்து, காற்றை தடுத்து அதற்குள் வாழை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. அதேபோல், கோவிந்தநகரம், ஏத்தக்கோயில், வெங்கடாசலபுரம், கடமலை, மயிலை பகுதிகளிலும், வாழை சாகுபடி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

## வரத்து குறைவால் முண்டு மிளகாய் விலை அதிகரிப்பு : வறட்சியால் கையிருப்பு இன்றி விவசாயிகள் கவலை

**ஆர்.எஸ்.மங்கலம்** : ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் விளைச்சல் குறைவால், கடந்தாண்டை விட முண்டு மிளகாய் குவிண்டாலுக்கு 3000 ரூபாய் வரை விலை

உயர்ந்துள்ளது. லாபம் இருந்தும் விளைச்சல் இல்லாததால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆர்.எஸ்.மங்கலம் மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களில் நெல்லுக்கு அடுத்தபடியாக மிளகாய் சாகுபடிசெய்யப்படுகிறது. கடந்த 2 ஆண்டுகளாக மாவட்டத்தில் பருவமழை பொய்ப்பால் விவசாய நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் விவசாயிகள் பெரிதும் அவதிப்பட்டு வருகின்றனர். ஆர்.எஸ்.மங்கலம் பகுதியில் நடப்பாண்டு சுமார் 18 ஆயிரம் ஏக்கரில் மிளகாய் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. கடந்தாண்டு நவம்பர் கடைசி வாரத்தில் விதைப்பு செய்யப்பட்ட மிளகாய் செடிகள் தற்பொழுது மகசூல் பருவத்தை எட்டியுள்ளது. ஏக்கருக்கு 80 மூடைகள் (மூடைக்கு 20 கிலோ)ஆயிரத்து 600 கிலோ கிடைக்கவேண்டிய இடத்தில், மழை கைவிரிப்பால் வறட்சி காரணமாக ஏக்கருக்கு 30 மூடைகள் வரையே கிடைக்கின்றன. நடப்பாண்டு ஏக்கருக்கு 1000 கிலோ விளைச்சல் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. விளைச்சல் குறைவால் கடந்தாண்டை விட, நடப்பாண்டு முண்டு மிளகாய் விலை உயர்ந்துள்ளது. கடந்தாண்டில் இதே காலகட்டத்தில் குவிண்டால் (100 கிலோ) ரூ. 7500க்கு விற்கப்பட்டது. தற்போது, விளைச்சல் குறைவால் 3000 ஆயிரம் ரூபாய் அதிகரித்து, குவிண்டால் 10,500 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. மிளகாய் விவசாயி, டேவிட்: மானாவாரியாக மிளகாய் சாகுபடி செய்யப்படுகிறது. ஆண்டுதோறும் மழை காலங்களை ஒட்டி சாகுபடி செய்யப்படுவது வழக்கம். லேசான ஈரப்பதம் இருந்தால் போதுமானது. நடப்பாண்டு சரியான நேரத்தில் மழை பெய்யாததால் பெரும்பாலான செடிகள் கருகின. இதனால், மகசூல் மிகவும் பாதிக்கப்பட்டது. கடந்தாண்டு, நல்ல மகசூல் இருந்தும் அதற்கான விலை இல்லை. நடப்பாண்டு, விலை உயர்ந்தும் அதற்கான மகசூல் இல்லை. வறட்சியால் கையிருப்புக்குக்கூட மிளகாய் வத்தல் இல்லை.

கேரள வியாபாரி கண்ணன்: ஆந்திரா மாநிலம் குண்டூரில் சம்பா மிளகாய் (குச்சி மிளகாய்)சாகுபடி அதிகரித்துள்ளது. ஆனால், ராமநாதபுரம் மாவட்ட முண்டு மிளகாய் அப்பகுதியில் கிடைப்பதில்லை. இந்த வகை மிளகாயில் காரம் குறைவாக இருப்பதாலும், மிளகாய் சாந்து(பொடி) அதிகமாக கிடைப்பதாலும் வெளிமாநிலங்களில் நல்ல வரவேற்பு உள்ளது. கடும் வறட்சியால் தற்போது மகசூல் குறைந்துவிட்டதால் விலை உயர்வு ஏற்பட்டுள்ளது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 1200 மூட்டை மஞ்சள் ரூ.50 லட்சத்திற்கு ஏலம்



**திருச்செங்கோடு:** நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் வெள்ளிக்கிழமை மஞ்சள் ஏலம் நடந்தது.

இதில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் சுமார் 1,200 மூட்டை மஞ்சள் கொண்டு வந்தனர்.

கடந்த வாரத்தைவிட 200 மூட்டைகள் அதிகம் வந்திருந்தது. இவற்றை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 25க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். ஏலம் மூலம் ரூ.50 லட்சத்திற்கு மஞ்சள் விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலுக்கு ரூ.7,100 முதல் ரூ.8,272 வரை விற்பனையானது. கிழங்கு ரகம் ரூ.6,150 முதல் ரூ.7,299 வரை விலைபோனது.

பனங்காளி ரகத்திற்கு ரூ.11,100 முதல் ரூ.13,500 வரை விலை கிடைத்தது. விரலி ரகத்திற்கு அதிக விலை கிடைத்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

**ஏற்காட்டில் வாட்டியெடுக்கும் வெயில்: காபி உற்பத்தி பாதிக்கும் அபாயம்**



**ஏற்காடு**: ஏற்காட்டில், எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு தற்போது வெயில் வாட்டியெடுக்கிறது. இதனால், காபி உற்பத்தி பாதிக்கும் என்று விவசாயிகள் அச்சமடைந்துள்ளனர். சேலம் மாவட்டம், ஏற்காடு பகுதியில் காலை 10 மணி வரை மிதமான வெப்பம் காணப்படுகிறது. இதையடுத்து, மாலை 4 மணி வரை வெயில் சுட்டெரித்து வருகிறது. மாலை 6 மணிக்கு மேல் கடும் குளிர் வாட்டி எடுக்கிறது. எந்த ஆண்டும் இல்லாத அளவுக்கு தற்போது முன்னதாகவே, கோடை வெயில் சுட்டெரிக்கிறது. இதனால் அந்த பகுதியில் காபி உற்பத்தி பாதிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து காபி விவசாயிகள் கூறியதாவது: காபியில் தற்போது அரும்புகள் வரத்தொடங்கியுள்ளன. மார்ச் மாதம் முதல் பூ, ஏப்ரல் மாதம் 2வது பூ, அந்த மாத கடைசியில் 3வது பூ விடும். அரும்புகள் மலரும் தருணத்தில் உரிய நேரத்தில் மழை பெய்தால் கூடுதல் பிஞ்சு பிடிக்கும் வாய்ப்பு ஏற்படும். இந்த மாத இறுதிக்குள் ஒரு மழை பெய்தால் எதிர்வரும் நவம்பர் மாதம் காபி அறுவடையில் கூடுதல் மகசூல் கிடைக்கும். ஆனால், கடந்த ஒரு வாரமாக பகலில் கடும் வெயிலும், இரவு நேரத்தில் பனிப்பொழிவும் காணப்படுவ தால் மழை பெய்வதற்கான எந்த அறிகுறியும் இல்லை. இந்த மாத இறுதிக்குள் மழை வராவிட்டால் பூக்கள் காய்ந்து அப்படியே உதிர்ந்து விடும். மேலும், எஸ்டேட்களில் கடந்த ஆண்டு பயிரிட்ட சில்வர் ஓக், காபி உள்ளிட்ட பயிர்கள் முற்றிலும் கருகும் நிலை ஏற்படும். இவ்வாறு விவசாயிகள் தெரிவித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## கோபி வேளாண்மை விற்பனை சங்கத்தில் ரூ.8 லட்சத்துக்கு வாழைப்பழம் ஏலம்



**கோபிசெட்டிபாளையம்,**

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் ரூ.8 லட்சத்துக்கு வாழைப்பழம் ஏலம் போனது.

**<u>வாழைப்பழம் ஏலம்</u>**

கோபி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் புதன்கிழமை மற்றும் சனிக்கிழமை வாழைப்பழம் ஏலம் நடைபெறுவது வழக்கம். அதுபோல் நேற்றுமுன்தினம் நடந்த ஏலத்துக்கு கோபிசெட்டிபாளையம் மற்றும் அதன்சுற்றுவட்டார பகுதியை சேர்ந்த விவசாயிகள் 5 ஆயிரத்து 500 வாழைப்பழத்தார்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர்.

இதில் கதலி ரக வாழைப்பழம் ஒரு கிலோ 20 ரூபாய்க்கும், நேந்திரன் ரகம் ஒரு கிலோ 18 ரூபாய்க்கும் விற்பனை ஆனது. இதேபோல் செவ்வாழை தார் ஒன்று ரூ.720–க்கும், ரொபஸ்டா ரூ.440–க்கும் (தார்), தேன்வாழை ரூ.450–க்கும் (தார்), ரஸ்தாளி ரூ.350–க்கும் (தார்), மொந்தன் ரூ.320–க்கும் (தார்), பூவன் ரூ.325–க்கும்

(தார்), பச்சைநாடன் ரூ.280–க்கும் (தார்) ஆக மொத்தம் ரூ.8 லட்சத்துக்கு ஏலம் போனது.

<u>**தேங்காய்**</u>

இந்த வாழைப்பழங்களை திருப்பூர், பெருந்துறை, ஊத்துக்குளி ஆகிய பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் போட்டிப்போட்டு வாங்கிச்சென்றனர்.

இதேபோல் நடந்த தேங்காய் ஏலத்துக்கு விவசாயிகள் 14 ஆயிரம் தேங்காய்களை விற்பனைக்காக கொண்டு வந்திருந்தனர். இதில் தேங்காய் ஒன்று குறைந்தபட்ச விலையாக ரூ.6–க்கும், அதிகபட்ச விலையாக ரூ.16–க்கும் விற்பனை ஆனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 40 ஆயிரத்துக்கு தேங்காய் ஏலம் போனது.

**ஜனவரி மாதத்தில் தேயிலை உற்பத்தி 6 சதவீதம் சரிவு**



**புதுடெல்லி,**

தேயிலை உற்பத்தி ஜனவரி மாதத்தில் 6 சதவீதம் சரிந்து 2.06 கோடி கிலோவாக குறைந்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 2.19 கோடி கிலோவாக இருந்தது. தென்மாநிலங்களில் உற்பத்தி குறைந்ததே இதற்கு காரணம் என தேயிலை வாரியம் தெரிவித்துள்ளது.

நாட்டின் தேயிலை உற்பத்தியில் அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களின் பங்களிப்பு அதிகமாக உள்ளது. அசாம் மாநிலத்தில் தேயிலை

உற்பத்தி ஜனவரி மாதத்தில் 8 லட்சம் கிலோ உயர்ந்துள்ளது. மேற்கு வங்காளத்தில் தேயிலை உற்பத்தி 19.50 லட்சம் கிலோவிலிருந்து 28.50 லட்சம் கிலோவாக அதிகரித்துள்ளது.

தமிழ்நாடு, கேரளா மற்றும் கர்நாடகா உள்ளிட்ட தென்மாநிலங்களின் மொத்த தேயிலை உற்பத்தி சென்ற ஆண்டை காட்டிலும் குறைந்துள்ளது. இந்தியாவின் மொத்த தேயிலை உற்பத்தியில் அசாம், மேற்கு வங்காளம் மற்றும் தென்மாநிலங்களின் பங்களிப்பு 90 சதவீதமாக உள்ளது.

சென்ற 2012–13–ஆம் நிதி ஆண்டில் தேயிலை உற்பத்தி முந்தைய ஆண்டைக் காட்டிலும் 3.62 சதவீதம் அதிகரித்து 113.50 கோடி கிலோவாக இருந்தது. சர்வதேச அளவில் தேயிலை உற்பத்தி மற்றும் நுகர்வில் இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது.

**கோபி பகுதியில் உரமாக பயன்படும் அறுவடை செய்யப்பட்ட வாழைமரங்கள்**



**கோபிசெட்டிபாளையம்,**

கோபி பகுதியில் அறுவடை செய்யப்பட்ட வாழைமரங்களை உரமாக பயன்படுத்தி விவசாயிகள் புதிய முறையை கையாளுகின்றனர்.

**<u>வாழை அறுவடை</u>**

தடப்பள்ளி–அரக்கன்கோட்டை வாய்க்கால்கள் மூலம் சுமார் 24 ஆயிரத்து 500 ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. இந்த வாய்க்கால்களில் கடந்த ஆண்டு தண்ணீர் திறக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து விவசாயிகள் நெல், வாழை, கரும்பு உள்ளிட்ட பயிர்களை சாகுபடி செய்தனர்.

தடப்பள்ளி–அரக்கன்கோட்டை பாசன பகுதியில் கடந்த சில நாட்களாக கரும்பு, வாழை அறுவடை பணிகள் நடைபெற்றது. அறுவடை செய்யப்பட்ட வாழை மரத்தை விவசாயிகள் வெட்டி வெளியில் வீசியோ அல்லது வெட்டப்பட்ட வாழை மரத்தை விவசாய நிலத்தில் போட்டு மக்க வைத்து உரமாகவோ பயன்படுத்துகிறார்கள்.

இவ்வாறு வாழை மரத்தை வெட்டுவதற்கு பதிலாக, வாழை அறுவடை செய்யப்பட்ட நிலத்தில் டிராக்டர் மூலம் உழவு செய்வதன் மூலம் நேரடியாக வாழையை மக்க வைக்கும் புதிய முறையை விவசாயிகள் பயன்படுத்துகிறார்கள். இதன்மூலம் வாழை மரம் சிதைக்கப்பட்டு மண்ணில் கலந்து மக்கி உரமாகிறது.

**<u>உழவு பணி</u>**

இதுகுறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:–

வாழை அறுவடை செய்யப்பட்ட பிறகு கூலி ஆட்களை பயன்படுத்தி வாழை மரத்தை வெட்டுவோம். அப்போது ஒரு வாழைமரத்தை வெட்டுவதற்கு கூலியாக ரூ.5 கொடுக்கப்படும். இவ்வாறு வெட்டப்பட்ட வாழைமரம் நிலத்தில் போடப்பட்டு மக்கி உரமாக பயன்படுத்தப்படும். ஆனால் இந்த ஆண்டு முதல் வாழை மரத்தோடு சேர்த்து டிராக்டர் மூலம் உழவு செய்கிறோம். இதன்மூலம் வாழை மரங்கள் முழுவதுமாக சிதைக்கப்பட்டு மண்ணில் கலந்து இயற்கை உரமாக பயன்படுகிறது.

டிராக்டர் மூலம் உழவு செய்வதற்கு ஒரு மணிநேரத்திற்கு ரூ.1,500 வாடகையாக வசூலிக்கிறார்கள். வாழை அறுவடை செய்யப்பட்ட நிலங்களில் உழவு செய்வதற்கு ஒரு ஏக்கருக்கு சுமார் 4 மணி நேரம் ஆகிறது. இந்த நிலத்தை 3 மாதங்கள் அப்படியே விட்டுவிடுவோம். அதன்பின்னர் இதில் மஞ்சள் போன்ற பயிர்கள் சாகுபடி செய்ய உள்ளோம். வாழை மரத்தோடு சேர்த்து உழவு மேற்கொள்வதால்

மண்ணின் சத்து அதிகரிக்கிறது. மேலும் வேறு பயிர்கள் சாகுபடி செய்யும்போது எளிமையாக உழவு மேற்கொள்ள முடியும்.

இவ்வாறு அந்த விவசாயி கூறினார்.

## முதுமலை புலிகள் காப்பக பகுதிகளில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தீவிரம்



மாயார் பகுதியில் உள்ள ஒரு மாட்டுக்கு கால்நடை டாக்டர் தடுப்பூசி போடுவதை படத்தில் காணலாம்.

**மசினகுடி,**

முதுமலை புலிகள் காப்பக பகுதியில் உள்ள கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடை பெற்று வருகிறது.

புலிகள் காப்பகம்

முதுமலை புலிகள் காப்பகத் திற்குட்பட்ட பகுதிகளில் மாயார், தெப்பக்காடு, முது மலை உள்பட பல்வேறு கிரா மங்கள் உள்ளன. இந்த கிராமங் களில் ஆடு, மாடு, எருமை போன்ற கால்நடைகள் வளர்க் கப்பட்டு வருகிறது. இந்த கால் நடைகளுக்கு சில சமயங்களில் கோமாரி நோய், கால்புண் நோய் போன்ற நோய்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

அவ்வாறு ஏற்படும் பட்சத் தில் மேய்ச்சலுக்காக வனப் பகுதியினுள் செல்லும் கால் நடைகளில் இருந்து வன விலங்குகளுக்கு நோய் பரவ வாய்ப்பு உள்ளது. எனவே


இதனை தடுக்க புலிகள் காப்பக நிர்வாகம் பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

கோமாரி நோய் தடுப்பூசி

இதன் ஒரு பகுதியாக 6 மாதங்களுக்கு ஒரு முறை புலிகள் காப்பகத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள கால் நடைகளுக்கு நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கடந்த சில நாட்க ளாக முதுமலை புலிகள் காப்ப கத்திற்குட்பட்ட கிராமங்களில் உள்ள கால் நடைகளுக்கு தெப் பக்காடு கால்நடை டாக்டர் விஜயராகவன், கூடலூர் கால் நடை டாக்டர் தயாள் சேகர் மற்றும் மசினகுடி கால்நடை டாக்டர் வினோத்குமார் ஆகி யோர் தலைமையில் கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக மாயார் பகுதியில் உள்ள கால்நடை களுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தொடங்கப்பட்டு உள்ளது. இதற்கான பணிகளை வனச் சரகர் சுந்தர்ராஜன், பாரஸ்டர் ஆண்ட்ரூஸ் மற்றும் வனத் துறை ஊழியர்கள், கால்நடை பராமரிப்பு துறை ஊழியர்கள் ஈடுபட்டு வருகின்றனர்.

**திண்டுக்கல் மாவட்டத்தில் 1½ லட்சம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி**



**திண்டுக்கல்,**

திண்டுக்கல் மாவட்டத்தில் இதுவரை 1½ லட்சம் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

## கோமாரி நோய்

தமிழகத்தில் விவசாயத்திற்கு அடுத்தப்படியாக கால்நடை வளர்ப்பு முக்கிய தொழிலாக இருந்து வருகிறது. கால்நடைகளில் மாடுகளை கோமாரி எனும் நோய் தாக்குகிறது. இந்த நோயை கட்டுப்படுத்த ஆண்டுக்கு 2 முறை வீதம் கிராமம், கிராமமாக தடுப்பூசி போடப்பட்டு வருகிறது.

எனினும், கடந்த ஆண்டு கோமாரி நோய் தாக்கியதில் ஏராளமான மாடுகள் இறந்தன. இதனால் இந்த ஆண்டு மாடுகள் இறப்பை தடுக்க தீவிர தடுப்பூசி முகாம் நடத்த அரசு உத்தரவிட்டது. அதன்படி கடந்த 1–ந்தேதி கோமாரி நோய்க்கு தடுப்பூசி போடும் முகாம் தொடங்கியது.

## தடுப்பூசிகள்

இந்த முகாம் வருகிற 21–ந்தேதி வரை தொடர்ந்து நடத்தப்படுகிறது. இதற்காக கால்நடை மருத்துவர்கள், கால்நடை உதவியாளர்கள் கொண்ட 132 குழுக்கள் அமைக்கப்பட்டு உள்ளன.

இதைத் தொடர்ந்து இந்த குழுவினர் திண்டுக்கல், நிலக்கோட்டை, வேடசந்தூர். பழனி, ஒட்டன்சத்திரம், ஆத்தூர், கொடைக்கானல் ஆகிய பகுதிகளில் உள்ள கிராமங்களுக்கு சென்று தடுப்பூசி போடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

## 1½ லட்சம் மாடுகள்

இதற்காக தேவையான அளவு தடுப்பூசிகள் கால்நடை பராமரிப்புத் துறை மூலம் வழங்கப்பட்டு உள்ளன. திண்டுக்கல் மாவட்டத்தில் மொத்தம் 2 லட்சத்து 80 ஆயிரம் மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது. இதில் இதுவரை 1½ லட்சம் மாடுகளுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டு உள்ளன. மேலும், மீதமுள்ள மாடுகள் அனைத்துக்கும் கோமாரி தடுப்பூசி போடும் பணி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, கால்நடை வளர்ப்போர் தங்களுடைய மாடுகளுக்கு அருகில் நடைபெறும் முகாம்கள் அல்லது கால்நடை மருத்துவரை அணுகி கோமாரி தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம் என்று கால்நடை பராமரிப்பு துறையினர் தெரிவித்துள்ளனர்.

**சின்னமனூர் பகுதிகளில் புளி விலை குறைந்ததால் விவசாயிகள் கவலை**



சின்னமனூர் சுற்று வட்டார பகுதிகளில் புளி சீசன் தொடங்கிஉள்ள நிலையில் விலை குறைந்த தால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

<u>சீசன் தொடங்கியது</u>

தேனி மாவட்டம் சின்ன மனூர் அருகே உள்ள மார்க்கையன்கோட்டை, ஓடைபட்டி, காமாட்சிபுரம், சீப்பாலக்கோட்டை, எரசக்கநாயக்கனூர், சின்ன ஓவுலா புரம் ஆகிய பகுதிகளில் புளிய மரங்கள் அதிக அளவில் உள்ளன. இங்கு விளையும் புளி திண்டுக்கல், மதுரை உள்பட பல்வேறு மாவட்டங் களுக்கும், கேரளாவிற்கும் அதிக அளவில் விற்பனைக்காக கொண்டு செல்லப்படுகிறது.

சின்னமனூர் பகுதிகளில் தற்போது புளி சீசன் தொடங்கி இருக்கிறது. கடந்த ஆண்டு புளி விளைச்சல் அதிக அள வில் இருந்தது. இதையடுத்து 1 குவிண்டால் புளி ரூ.1500-க்கு விற்பனை செய்யப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு புளி விளைச்சல் மிகவும் குறைந்து உள்ளது. கடந்த ஆண்டு 10 குவிண்டால் விளைச்சல் கிடைத்த பகுதியில், தற்போது 2 குவிண்டால் என்ற அளவிற்கு தான் புளி கிடைத்துள்ளது.

<u>விலை குறைவு</u>

உற்பத்தி செலவை பொறுத்த வரை கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு தொழிலாளர் களின் சம்பளம் இருமடங் காக அதிகரித்து உள்ளது. ஆனால் புளி

விலையோ 1 குவிண் டால் ரூ.1800 வரை தான் விற்கப்படுகிறது. இதனால் லாபம் கிடைப்பது இல்லை என்று விவசாயிகள் வேதனை தெரிவிக்கின்றனர்.

ஒருசிலர் காடுகளை குத்தகைக்கு எடுத்துள்ளனர். ஆனால் எதிர்பார்த்த விலை கிடைக்காததால் குத்தகை தொகையை கூட எடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருளாக உள்ளபோதிலும், விளைச்சல் குறைந்து, விலையும் குறைந் துள்ளது. இதனால் விவசாயி கள் தவித்து வருகின்றனர்.